தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, திருமதி.செல்வி செல்வம், திருமதி.சாந்தா ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன், அறங்காவலர் சம்பத்குமார், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

கலைஞர் ஆட்சி முறை தேசிய அளவில் பின்பற்றக்கூடியது!

சமூக நீதியின் அடையாளம் முத்தமிழறிஞர் கலைஞர்!

திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் – முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைத்து பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் புகழாரம்!

திருவாரூர், ஜூன் 22-

கலைஞர் அவர்கள் கடைப்பிடித்த சமூக நீதி, சமத்துவம் போன்ற கொள்கைகளை தேசிய அளவில் செயல்படுத்துவது அவசியம் என்று கலைஞர் கோட்டம் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் கூறினார்.

திருவாரூர் அருகே காட்டூரில் தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் ரூ.12 கோடியில் 7,000 சதுர அடி பரப்பளவில் கலைஞர் கோட்டம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சியில் பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பங்கேற்றார்.

இந்த விழாவில் தேஜஸ்வி யாதவ் பேசியதாவது: -

இன்று இந்தச் சந்தர்ப்பத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறேன். புகழ் பெற்ற தலைவரான மறைந்த கலைஞர் அவர்களின் வாழ்க்கையையும், பாரம்பரியத்தையும் கொண்டாடுவதற்கு மட்டுமல்ல, நமது ஒட்டுமொத்த தேசத்தின் ஆட்சியில் அவரது எண்ணங்கள் மற்றும் கொள்கைகளின் தொடர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கவும் நாம் இங்கே கூடியுள்ளோம். அவரது கருத்துக்கள் யாவும் நமது மகத்தான தேசம் முழுவதும் பரவி தலைமுறைகளுக்கும் தொடர்ந்து எதிரொலித்து நமக்கு ஊக்கமளிக்கின்றன.

விளிம்பு நிலை சமூகங்களை மேம்படுத்த பாடுபட்ட கலைஞர்!

சமூக நீதிக்கான சிறந்த பிரதிநிதியாகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், விளிம்புநிலை சமூகங்களை மேம்படுத்துவதற்கும் பல கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் கலைஞர் கருவியாக செயல்பட்டார்.

கல்வி நிறுவனங்கள், அரசுப்பணிகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் பட்டியலின சாதிகள், பட்டியலின பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உள்ளிட்ட சமூக ரீதியாக பின்தங்கிய எல்லா சமூகங்களுக்கான இடஒதுக்கீட்டு கொள்கைகளை செயல்படுத்தி, அதை விரிவுபடுத்துவதிலும் அவர் முக்கிய பங்காற்றினார். அந்தக் கொள்கைகள் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு சம வாய்ப்புகளை வழங்குவதையும், சமூக ரீதியிலான இயங்கும் முறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞரின் தலைமையில் தமிழ்நாடு அரசு பொருளாதார ரீதியாக நலிவடைந்த சமூகத்தினரை மனதில் கொண்டு எண்ணற்ற நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அந்த திட்டங்களில் மானிய விலையில் உணவு தானியங்கள், சுகாதார சேவைகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வருமானம் பெறுவதற்கான உதவி ஆகியவை

அடங்கும். இத்தகைய முன்முயற்சிகள் வறுமையைப் போக்குவதையும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

சமத்துவமின்மையை அகற்ற பாடுபட்ட கலைஞர்!

பாரம்பரிய அடிப்படையில், மறைந்த கலைஞர் அவர்கள் சமூக நீதி, பகுத்தறிவு மற்றும் மக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை வலியுறுத்திய திராவிட சித்தாந்தத்தின் மீது தீவிர நம்பிக்கை கொண்டவராக இருந்தார். அவர் தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தை மேம்படுத்துவதில் தீவிரமாக செயல்பட்டார். மேலும், மொழி, சாதி மற்றும் மதத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை ஆகியவற்றை அகற்றவும் துடிப்புடன் செயல்பட்டார்.

புவியியல் ரீதியாக நாம் ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்தாலும் கூட, அவர் உருவாக்கிய திராவிட மாடல் என்பது நம் அனைவருக்கும் ஊக்கம் அளிக்கிறது என்பதை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். பெண்களுக்கான உரிமைகள், அதிகாரமளித்தல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றில் அவருக்கிருந்த உறுதிப்பாட்டையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். பெண்களுடைய அரசியல் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு, பாலின சமத்துவ அடிப்படையிலான கொள்கைகளை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அவர் அறிமுகப்படுத்தினார்.

கலைஞரின் அர்ப்பணிப்பு நமக்கு சிறந்த வழிகாட்டி!

சாதி அடிப்படையிலான பாகுபாடுகளை ஒழிப்பதற்காகச் செயல்படும் சாதி எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் அமைப்புகளை அவர் தீவிரமாக ஆதரித்தார். சாதி அடிப்படையில் ஏற்படும் வன்முறைகளைக் கண்டித்த அவர், சாதிகளுக்கு இடையேயான கலப்பு திருமணங்களை ஊக்குவிப்பதன் மூலம் சமூகத்தின் பழமையான படிநிலைகளுக்கு சவால் விடும் வகையில் செயல்பட்டார்.

நம்மைப் போன்ற இளைய தலைமுறையினருக்கு, மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமைத்துவமும், அரசியல் வாழ்க்கையும் நாம் எதற்காகப் பாடுபட வேண்டும் என்பதற்கான உத்வேகமாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருக்கிறது.

அவரது எண்ணங்களும், கொள்கைகளும் இந்தியாவுக்கே பொருத்தமாக இருக்கும் வகையில் அமைந்துள்ளவையாகும். சமூக நீதி நிலவும் வகையில், சமத்துவம் தழைத்தோங்கும் விதத்தில், விளிம்புநிலை மக்கள் ஆறுதல் அடையக்கூடிய எதிர்காலத்தை நோக்கி அவரது இலட்சியங்கள் திசைகாட்டியாகச் செயல்படுகின்றன.

கலைஞரின் கொள்கை மாண்பை, மு.க.ஸ்டாலின் சுமந்து செல்கிறார்!

இன்று, நமது மகத்தான தேசத்தின் வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான பாதையில் நிற்கும் நிலையில், தேசிய அளவில் கலைஞர் அவர்களின் ஆட்சி மாடல் அளிக்கும் உணர்வை நாம் உள்வாங்குவது அவசியம். சமூக நீதி, சமத்துவம் மற்றும் அனுதாபம் ஆகியவற்றை நமது நிர்வாகக் கட்டமைப்பின் மையக்கருத்தாக இருக்கும்படி ஒன்றிணைக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், ஒவ்வொரு குடிமகனும் தன்னை மதிப்புமிக்கதாக உணர்வதுடன், ஒவ்வொருவருடைய குரலும் கேட்கப்படுவதாக இருக்கும்.

கலைஞர் அவர்களின் சமூக நீதி காக்கும் கொள்கை மாண்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுமந்து செல்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள், மதிப்பிற்குரிய லாலு பிரசாத் மற்றும் முதல்வர் நிதிஷ்குமார் ஆகியோர்களுடைய வழிகாட்டுதலின் கீழ் சிறந்த வழிகாட்டுதலின் கீழ் பீகார் மாநிலத்தில் சோசலிசம், மதச்சார்பின்மை மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் கொடியை உயர்த்தி பிடித்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகள் வாழ்க..!

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் உரையாற்றினார்.

அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய வழக்கு:

அமலாக்கத்துறையின் கோரிக்கை அனைத்தும் நிராகரிப்பு!

உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெலில், ஜூன் 22 -

அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அமலாக்கத்துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. செந்தில் பாலாஜியின் மனைவியும் உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்தார். இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் சூர்யகாந்த், எம்.எம்.சுந்தரேஷ் அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அமலாக்கத் துறை வழக்கறிஞர் ஆஜராகி தனது வாதங்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செந்தில் பாலாஜியின் மனைவி மேகலா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், செந்தில் பாலாஜியின் இதயத்தில் 4 அடைப்புகள் உள்ள நிலையில் மருத்துவ அறிக்கை மீது அமலாக்கத்துறை சந்தேகம் எழுப்பியதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்து

வமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவரை எப்படி காவலில் எடுத்து விசாரிக்க முடியும் என அமலாக்கத்துறைக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதால், அமலாக்கத் துறை ஒரு மருத்துவக் குழு அமைத்து செந்தில் பாலாஜி உடல்நிலை எப்படி உள்ளது என்பதை அறியலாம் என வும் நீதிபதிகள் கூறினர்.

மேலும், ஆட்கொணர்வு மனு மீது உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது சரியானது என்றும், அதன் உத்தரவில் சந்தேகப்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என்றும் தெரிவித்த நீதிபதிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்குமாறு அமலாக்கத்துறை விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், அமலாக்கத்துறையின் செயலுக்கு தங்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.

மேலும், இந்த வழக்கை உயர்நீதிமன்றம் தொடர்ந்து விசாரித்து வருவதால் இதில் உச்சநீதிமன்றம் தலையிடுவது குறித்து பின்னர் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூலை 4ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இருதய அறுவை சிகிச்சை நிறைவு!

உடல்நிலை சீராக உள்ளது - காவேரி மருத்துவமனை தகவல்!

சென்னை, ஜூன் 22-

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு காவேரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்தது. அவரது உடல்நிலை சீராக உள்ளதாக காவேரி மருத்துவமனை அறிவித்துள்ளது.

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்து 17 மணி நேரம் தொடர் விசாரணை நடத்தியதில், அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். பின்னர், மருத்துவர்கள் நடத்திய சோதனைகளில் அவரது இதயத்தில் அடைப்பு கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜியின் மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், அமைச்சர் செந்தில் பாலாஜியை சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கும்படி உத்தரவிட்டது. இந்நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நேற்று காலை 5 மணியளவில் தொடங்கிய பைபாஸ் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவ டைந்துள்ளது. மருத்துவர் ரகுராமன் தலைமையிலான மருத்துவக்குழு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இந்நிலையில் காவேரி மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைச்சர் செந்தில் பாலாஜியின் இதயத்தில் இருந்த 4 அடைப்புகள் அகற்றப்பட்டதாகவும், அவரது உடல் நிலை சீராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 22 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வடதமிழக பகுதிகளின் மேல், மேலடுக்குகளில் கிழக்கு திசை காற்றும் மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக, நேற்று (21.06.2023) வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

இன்று (22.06.2023) முதல் 25.06.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 34 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும். மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்ட முரசொலி நிருபர்

மு.குமார் மனைவி பூங்கொடி குமார் மறைவு!

கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி!

அரியலூர், ஜூன் 22-

அரியலூர் மாவட்ட முரசொலி நிருபரும், ஜெயங்கொண்டம் நகராட்சி துணைச் செயலாளருமான மு.குமார் மனைவி மு.பூங்கொடி (வயது 42) தீடீர் உடல் நலக்குறைவால் நேற்று 21.06.2023 அன்று காலை 5.00 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த கழக நிர்வாகிகள், ஊடகத் துறை

யினர் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அம்மையாரது இறுதி ஊர்வலம்இன்று(22.06.2023) காலை 10.00 மணியளவில் ஜெயங்கொண்டம், அண்ணா நகரில் இருந்து புறப்படும்.

தமிழ்நாடு முழுவதுமுள்ள மதுபான கடைகளில்

500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் இன்று முதல் மூடப்படும்!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூன் 22-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் உள்ள மதுபானக் கடைகளில் 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் இன்று முதல் மூடப்படுகின்றன என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கையின் போது 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் கண்டறியப்பட்டு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேற்படி, அறிவிப்பிற்கிணங்க 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளைக் கண்டறிந்து மூடிட 20.04.2023 நாளிட்ட அரசாணை எண்.140, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை வெளியிட்டது.

மேற்படி, அரசாணையை செயல்படுத்தும் விதமாக மாநிலம் முழுவதும் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 500 கடைகளை கண்டறிந்து அவற்றை இன்று (22.6.2023) முதல் மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மேற்குறிப்பிட்ட 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் இன்று (22.6.2023) முதல் செயல்படாது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு

ஈரோடு மாநகராட்சி

ந.க.எண்.இ1 / 3440 / 2022 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்.19.06.2023

ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் 15வது CENTRAL FINANCE COMMISSION (TIED GRANT) - 2022-23-ம் மானிய பணிகளுக்கு E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மொத்த பணிகளின் எண்ணிக்கை-8 (திடக்கழிவு மேலாண்மை பணிகள்-5 மற்றும் குடிநீர் கட்டமைப்புப் பணிகள்-3). இந்த பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ.389.40 இலட்சங்கள். ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை https://tntenders.gov.in என்ற இணைய தளங்களில் மட்டும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களையும் (E-Mail id: commr.erode@tn.gov.in. Phone No.0424-2251616) என்ற முகவரியில் பெறலாம்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் நேரம் மற்றும் நாள் :

அ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல்	23.06.2023 முதல் 10.07.2023 வரை (3.00 P.M)
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	10.07.2023 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	11.07.2023 மாலை 3.30 மணி

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில். அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.கி / 3154 / ஒப்பந்தப்புள்ளி /2023

(ஒம்) பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கள்ளக்குறிச்சி மாவட்டம்

குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT) 2022-23ம் ஆண்டிற்கு ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல்

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி இணை இயக்குநர்/திட்ட இயக்குநரால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2022–23ம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT) ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.06.2023 முதல் 28.06.2023 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. **முக்கியமான நாள் மற்றும் நேரம்.**
   (i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 28.06.2023 பிற்பகல் 3.00 மணி வரை.
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.06.2023, 4.00 மணிக்கு.

செ.ம.தொ.இ./ 3159 /ஒப்பந்தப்புள்ளி/2023

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"